மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 20/2018 | சாட்சி | வ.சா.1 |
| பெயர் | லட்சுமணன் | நாள் | 09.11.2023 |
| தகப்பனார் பெயர் | தானப்பன் | | |

**5 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

11) என் தந்தையால் இதே நீதிமன்றத்தில் ஒரு பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி வழக்கில் தற்போது இவ்வழக்கில் உள்ள சொத்துக்களும் காட்டப்பட்டுள்ளதா என்றால், என் தந்தை அவ்வழ்க்கை நடத்தியதால், எனக்கு அது குறித்து தெரியவில்லை. மேற்படி தள்ளுபடி உத்தரவிற்கெதிராக நான் மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண்ணும், மேல்முறையீட்டு வழக்கு எண்ணும் எனக்கு சரியாக நினைவில்லை.

12) தற்போது மேற்படி மேல்முறையீடு நிலுவையில் தான் உள்ளது. தற்போது மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் இவ்வழக்கு சொத்து காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. மேற்படி பாக பிரிவினை வழக்கு குறித்து 1ம் பிரதிவாதி தன் பதிலுரையில் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை.

13) நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் படிக்க தெரியுமா என்றால், படிக்க தெரியும். என் முதல் விசாரணை சாட்சியத்தில், 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரை குறித்தோ, மற்ற பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரை குறித்தோ நான் மறுப்பு தெரிவித்துள்ளேனா என்றால், நான் மேற்படி பதிலுரைகளை படித்து பார்க்கவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் பிரமாண பத்திரிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் பத்தி 7ல் பதிலுரைகள் பொய் என நான் மறுத்துள்ள நிலையில் மேற்படி பதிலுரைகளை படித்து பார்க்காமலேயே நான் மறுத்துள்ளேன்

என்றால் சரிதான்.

14) என் பாட்டனார் ராமசாமிகவுண்டருக்கு 4 ஆண் வாரிசுகளும், 2 பெண் வாரிசுகளும் பிறந்தனர் என்றால் சரிதான். மேற்படி 2 பெண் வாரிசுகளை இவ்வழக்கில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி லிங்கேஷ்வரன் மேற்படி என் பாட்டனாரின் மகன் வழி பேரன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் தந்தை பெயர் காளியப்பன் என்றால் சரிதான்.

15) என் பாட்டனார் குடும்பத்திற்கு பல இடங்களில் சொத்துக்கள் உள்ளது என நான் சொல்லியுள்ள நிலையில் இவ்வழக்கில் மேற்படி சொத்துக்களை காண்பிக்கவில்லை என்றால் சரிதான். என் தந்தையால் தாக்கல் செய்யப்பட்ட பாகபிரிவினை வழக்கிலோ, அதன் மீது நான் தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கிலே பிரதிவாதிகள் பட்டா மாறுதல் செய்ய முயற்சிக்கிறார்கள் என கூறி அவர்களுக்கெதிராக நான் தற்போது இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் மேற்படி அசல் வழக்கிலோ, மேல்முறையீட்டு வழக்கிலோ கோரப்பட்டுள்ளதா என்றால் மேற்படி மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் 1ம் பிரதிவாதி பட்டா மாறுதல் செய்ய முயற்சித்தது குறித்து எனக்கு தெரியாது.

16) இவ்வழக்கு எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்றால், தாக்கல் செய்யப்பட்டு சுமார் 5 வருடங்கள் ஆகிறது. என் தந்தையால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு எதிராக நான் மேல்முறையீடு தாக்கல் செய்து எவ்வளவு காலம் இருக்கும் என்றால், சுமார் 11 வருடங்கள் ஆகிறது. தற்போது இவ்வழக்கு நான் தாக்கல் செய்த போது சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். இவ்வழக்கில் எனக்கு உடன் பிறந்தவர்களையோ, என் பாட்டனார் ராமசாமி கவுண்டரின் இதர வாரிசுகளையோ தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால், இல்லை. என் பாட்டனார் நிலத்தை நானே அனுபவித்து வருவதால் தன்னிச்சையாக நான் மட்டும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

17) இவ்வழக்கில் என் பாட்டனார் ராமசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட் சொத்துக்களை நானே அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அதனால் தாவா சொத்துக்குரிய பட்டா என் பெயருக்கு மாற்றப்பட வேண்டும் என பரிகாரம் கேட்கிறேனா என்றால், இல்லை. மேற்படி பட்டா என் பாட்டனார் பெயரிலேயே இருக்க வேண்டும் என நான் கோரியுள்ளேன்.

18) என் பாட்டனார் ராமசாமிகவுண்டர் எந்த தேதியில் இறந்தார் என்றால், தேதி சரியாக நினைவில்லை. என் வீட்டில்தான் அவர் இறந்தார். என் பாட்டனார் இறந்தபோது எனக்கு என்ன வயது என்றால் எனக்கு தெரியாது. என் பாட்டனார் என்ன விலாசத்தில் இறந்தார் என்றால், எங்களது வீட்டில்தான் இறந்தார். கதவு எண்ணெல்லாம் கிடையாது. என்ன விலாசம் என்றால் ஆவடத்தூர் கிராமம், மொசராண்டி வளவு. என் பாட்டனார் என் வீட்டில்தான் இறந்தார் என்பதற்கு விலாசம் தொடர்பாக ஏதேனும் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

19) எங்கள் குடும்ப சொத்துக்கள் தொடர்பாக என் குடும்பத்திற்கும், 1ம் பிரதிவாதி குடும்பத்திற்கும் இடையே 1996ம் வருடத்திலிருந்து வழக்குகள் நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். மேற்படி வழக்குகள் அனைத்தும் என் பாட்டனார் சொத்துக்கள் என்று சொல்லிதான் நாங்கள் இதுவரை வழக்கு நடத்தி வருகிறோம் என்றால், சரிதான். இதுவரை என் பாட்டனாரின் இறப்பு சான்றிதழையும், வாரிசு சான்றிதழையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(5முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.